ரூ.53.00 கோடியில் இரத்தப் புற்றுநோய் மற்றும் உடல் உறுப்பு மாற்று உயர் சிகிச்சை மைய கட்டடம்!

ரூ. 5.89 கோடியில் மருத்துவப் பயனாளிகளின் உதவியாளர்கள் தங்கும் விடுதி!

எழும்பூர் தொகுதியில் ரூ. 2.03 கோடியில் நகர்புற ஆரம்ப சுகாதார மையம்!

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை,பிப்.26-

சென்னை எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனை வளாகத்தில், இரத்த புற்றுநோய் மற்றும் உறுப்பு மாற்று உயர் சிகிச்சை மைய கட்டடம்

சென்னை எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனை வளாகத்தில் 53.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 92,397 சதுரஅடி பரப்பளவில், 131 படுக்கை வசதி, தரைத்தளம் மற்றும் ஆறு தளங்களுடன் கட்டப்பட்டுள்ள இரத்த புற்றுநோய் மற்றும் உறுப்பு மாற்று உயர் சிகிச்சை மைய கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

இக்கட்டிடத்தின் தரை தளத்தில் வரவேற்பு கூடம், தீயணைப்பு கட்டுப்பாட்டு அறை (Fire Fighting Pump room), மருத்துவ வாயு மைய இணைப்பு அறை (Manifold Room), மருத்துவ கழிவுநீர் சுத்திகரிப்பு அறை (E.T.P Room), காத்திருப்பு அறை மற்றும் வாகன நிறுத்துமிடம், முதல் தளத்தில் ஹீமோபீலியா மற்றும் ஹீமோகுளோபினோபதி சிகிச்சை பிரிவு, டே கேர் கீமோதெரபி அலகு, கருத்தரங்கம், செய்முறை அறை ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன.

இரண்டாவது தளத்தில் ஹெமடாலஜி ஆய்வகம், ரேடியோலஜி ஆய்வகம், ஸ்டெம் செல் ரெஜிஸ்ட்ரி மற்றும் செல்லுலார் தெரபி ஆய்வகம், டிஜிட்டல் எக்ஸ்-ரே மற்றும் அல்ட்ரா சவுண்ட் பிரிவுகளும், மூன்றாவது தளத்தில் ஸ்டெம் செல் மாற்று செய்முறைக்கு உட்படும் மருத்துவ பயனாளிகள் தங்கும் அறைகள், நான்காவது தளத்தில் ஹெமடோ-ஆன்காலஜி பிரிவு, இன்மை பாதுகாப்பு குறைந்தவர்களுக்கான தனிப்பட்ட அறைகள், சிறப்பு அறைகள், செய்முறை அறை ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன.

ஐந்தாவது தளத்தில் ஹெமடோ-ஆன்காலஜி பிரிவு, சிறப்பு அறைகள், அறுவை சிகிச்சைக்கு முந்தைய பிரிவு, செய்முறை அறை. உறுப்பு மாற்று முன் அறுவை சிகிச்சை பிரிவு, ஆறாம் தளத்தில் எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை அரங்கம், கல்லீரல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை அரங்கம், அறுவை சிகிச்சைக்கு பிந்தைய பிரிவு, அறுவை சிகிச்சைக்குப் பின் நோயாளி பராமரிப்பு அறை, அறுவை சிகிச்சைக்கு முன் நோயாளி கவனிப்பு அறை போன்ற பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

சென்னை அரசு தாய்-சேய் நல மருத்துவமனை வளாகத்தில், மருத்துவ பயனாளிகளின் உதவியாளர்கள் தங்கும் விடுதி

எழும்பூரில் உள்ள அரசு தாய் சேய் நல மருத்துவமன 1,075 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் ஆண்டொன்றிற்கு சுமார் 15,000 பிரசவங்கள் நடைபெறுகிறது.

அரசு குழந்தைகள் நல மருத்துவ மனை 837 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனையாக செயல்பட்டுவருகிறது.

அரசு தாய் சேய் நல மருத்துவ மனை மற்றும் அரசு குழந்தைகள் நல மருத்துவமனையில் உள்ள மருத்துவப் பயனாளிகளின் உதவியாளர்கள் தங்குவதற்கு ஏற்றவகையில் 100 படுக்கைகள் கொண்ட தரைதளம் மற்றும் நான்கு தளங்களுடன் கூடிய கட்டடம் கலைஞர் நினைவு பன்னாட்டு மாராத்தான் நிதி பங்களிப்பு மற்றும் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் மொத்தம் ரூ.பாய் 5.89 கோடி மதிப்பீட்டில் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் கட்டப்பட்டுள்ளது.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (25.2.2026) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் 53.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எழும்பூரில் சென்னை அரசு குழந்தைகள் நல மருத்துவமனை வளாகத்தில் கட்டப்பட்டுள்ள இரத்த புற்றுநோய் மற்றும் உடல் உறுப்பு மாற்று உயர் சிகிச்சை மைய கட்டடம், சென்னை எழும்பூர் தாய்-சேய் நல மருத்துவமனை மற்றும் அரசு குழந்தைகள் நல மருத்துவமனையில் கலைஞர் நினைவு பன்னாட்டு மாரத்தான் நிதி பங்களிப்புடன், நமக்கு நாமே திட்டத்தின் கீழ் 5.89 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5 தளங்களுடன் கட்டப்பட்டுள்ள மருத்துவ பயனாளிகளின் உதவியாளர்கள் தங்கும் விடுதி ஆகியவற்றை திறந்து வைத்தார்.

முன்னதாக தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் எழும்பூர் செனாய் நகர், சுப்பராயன் சாலையில் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் 2.03 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நகர்புற ஆரம்ப சுகாதார மைய கட்டடத்தை திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், துணை மேயர் மு.மகேஷ்குமார், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்த்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் ப. செந்தில் குமார், நியமனக்குழு உறுப்பினர் சொ.வேலு, மாமன்ற உறுப்பினர்கள் சுந்தர்ராஜன், ரா.ஜெகதீசன், துணை ஆணையாளர்கள் வி.சிவகிருஷ்ணமூர்த்தி, (பணிகள்) எச். ஆர்.கௌஷிக், (மத்திய வட்டாரம்) உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் உடனிருந்தனர்.

கண்ணகி நகரில் ரூ.75.00 இலட்சத்தில் கட்டப்பட்டுள்ள

நவீன கபடி உள்விளையாட்டு அரங்கத்தில் கபடி விளையாட்டுப் போட்டி!

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் துவக்கி வைத்து பார்வையிட்டார்!

சென்னை,பிப்.26-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கண்ணகி நகரில் 75.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நவீன கபடி உள்விளையாட்டு அரங்கத்தில் நேற்று (25.2.2026) கபடி விளையாட்டு போட்டியை தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு தமிழ்நாட்டில் ஆசிய, சர்வதேச அளவிலான பல்வேறு விளையாட்டு போட்டிகளை தொடர்ந்து நடத்தி, சென்னையை இந்தியாவின் விளையாட்டு தலைநகரமாகவும், உலகின் முக்கிய நகரமாகவும் உருவாக்கி வருகின்றது.

இதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டின் அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் முதலமைச்சர் சிறிய விளையாட்டரங்கங்கள், உடற்பயிற்சி கூடங்கள், சர்வதேச தரத்திலான ஹாக்கி விளையாட்டு மைதானங்கள், விளையாட்டு நகரம் என பல்வேறு முன்னேடுப்புகளை செய்து வருகின்றார். மேலும் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் சர்வதேச போட்டிகளில் பங்கேற்கவும், பயிற்சி பெறவும், விளையாட்டு உபகரணங்களை வாங்குவதற்காகவும், விமான பயணங்களை மேற்கொள்ளவும் தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளையை உருவாக்கி நிதியுதவி வழங்கி வருகின்றார். இதன் காரணமாக தமிழ்நாட்டின் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் சர்வதேச அளவிலான போட்டிகளில் பங்கேற்று பதக்கங்களை குவித்து வருகின்றார்கள்.

இதன் ஒரு பகுதியாக சென்னை கண்ணகி நகரைச் சேர்ந்த கபடி வீராங்கனை ர.கார்த்திகா பஹ்ரைனில் 2025 இல் நடைபெற்ற 18 வயதுக்குட்பட்ட ஆசிய அளவிலான பெண்கள் கபடி போட்டியில் பங்கேற்று இந்திய அணி தங்கப் பதக்கம் வெல்வதற்கு காரணமாக விளையாடினார். மேலும் கண்ணகி நகரைச் சேர்ந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகள் கபடி போட்டியில் மிகுந்த ஆர்வம் கொண்டவர்களாக உள்ளனர். அவர்களை மேலும் ஊக்கப்படுத்தி சர்வதேச தரத்திலான வீரர்களை உருவாக்கும் வகையில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் கண்ணகி நகரில் சர்வதேச தரத்திலான கபடி உள்விளையாட்டரங்கம் அமைக்க ஏற்பாடு செய்தார்.

இதனைத் தொடர்ந்து பெருநகர சென்னை மாநகராட்சியின் கண்ணகி நகர் மைதானத்தில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை கீழ் செயல்பட்டு வரும் தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டு கழகம் (தாட்கோ) மூலமாக தாட்கோ நிதியிலிருந்து 75.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பார்வையாளர் மாடம், உடற்பயிற்சி கூடம், பயிற்சியாளர் அறை, ஒப்பனை அறை மற்றும் சர்வதேச தரத்திலான செயற்கை தளங்களுடன் புதியதாக கபடி உள்விளையாட்டரங்கம் கட்டப்பட்டது.

கண்ணகி நகரில் 75.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நவீன கபடி உள்விளையாட்டு அரங்கத்தை இன்று (25.2.2026) தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் 18 வயதிற்கு உட்பட்டோருக்கான இந்திய மகளிர் கபடி அணியின் துணை கேப்டன் வீராங்கனை ர. கார்த்திகா திறந்து வைத்தார். முன்னதாக, தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கபடி உள்விளையாட்டு அரங்கத்தின் கல்வெட்டை திறந்து வைத்தார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இந்திய அணி தங்கப் பதக்கம் வெல்வதற்கு காரணமான வீராங்கனை ர.கார்த்திகாவிற்கு தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் ஊக்கத்தொகையாக 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் இந்திய அணி தங்கப் பதக்கம் வெல்வதற்கு காரணமாக வீராங்கனை ர.கார்த்திகாவிற்கு தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் ஊக்கத்தொகையாக 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். மேலும் இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் கண்ணகி நகர் கபடி வீரர்கள் பயிற்சி பெறுவதற்கான பல்வேறு உடற்பயிற்சி சாதனங்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். அரவிந்த் ரமேஷ், ஏ.எம்.வி.பிராபகர ராஜா, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழக தலைவர் நா. இளையராஜா, துணை மேயர் மு. மகேஷ் குமார், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் திருமதி க.லட்சுமி பிரியா, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக்கழக மேலாண்மை இயக்குநர் க.சு. கந்தசாமி, நிலைக்குழுத் தலைவர் த. விசுவநாதன், மண்டலக்குழுத் தலைவர்கள் எஸ். வி. ரவிச்சந்திரன், வி. இ. மதியழகன், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் திருமதி ஸ்ரேயா பி. சிங் துணை ஆணையாளர்கள் வி.சிவகிருஷ்ணமூர்த்தி, (பணிகள்), அஃப்தாப் ரசூல், (தெற்கு வட்டாரம்) மற்றும் கபடி வீரர், வீராங்கனைகள் உடனிருந்தனர்.

தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில்

கண்ணகி நகரில் ரூ.4.00 கோடியில் நவீன நூலகம்!

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை,பிப்.26-

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.2.2026) தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் கண்ணகி நகரில் 4.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நவீன நூலகத்தை திறந்து வைத்தார்.

தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் கண்ணகி நகர் மற்றும் எழில் நகர் திட்டப் பகுதிகளில் 23,704 குடியிருப்புகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டப் பகுதியில் 4.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 11,162 சதுர அடி நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் தரைத்தளம், முதல் தளம் என இரண்டு தளங்களுடன் 11,572 சதுர அடி பரப்பளவில் தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் நவீன நூலகம் கட்டப்பட்டுள்ளது.

இந்த நூலகத்தில் வரவேற்கும் இடம், புத்தகங்கள் வைத்திருக்கும் இடம், குழந்தைகளுக்கான புத்தகங்கள் மற்றும் விளையாடும் இடம், பயிற்சி அறை, திறந்த நிலை பயிலும் இடம், 10,000 லிட்டர் நீர்த்தேக்கத் தொட்டி, கழிப்பிட வசதி, வாகன நிறுத்துமிடம் என பல்வேறு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இன்று இந்த நூலகத்தை திறந்து வைத்த தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நூலகத்தில் தினசரி நாளிதழ்கள் பிரிவில் வாசகர்கள் நடப்பு செய்திகளை குறிப்பு எடுப்பதை பார்வையிட்டு அவர்களிடம் கலந்துரையாடினார். மேலும் குழந்தைகள் பிரிவில் அவர்களுடன் உரையாடி குழந்தைகளுக்கு பிடித்த புத்தகங்கள் குறித்து கேட்டறிந்தார்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். அரவிந்த் ரமேஷ், ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, துணை மேயர் மு. மகேஷ் குமார், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் திருமதி ஸ்ரேயா பி. சிங் நிலைக்குழுத் தலைவர் த. விசுவநாதன், மண்டலக்குழுத் தலைவர்கள் எஸ். வி. ரவிச்சந்திரன், வி. இ. மதியழகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.